www.padippakam.com

புதிய
# சமதர்மம்

உள்ளே

இடது சாரிகள் ஒன்றுபட வேண்டும் 2ம் பக்கம்

இத்தாலியின் நெருக்கடிகள் 3ம் பக்கம்

Vol. 1 மலர் 1 இதழ் 4 விலை ரூபாய் 5.00 பங்குனி 1996

# தேசிய அரசாங்கம்? வேண்டாம்!
## அந்த பூச்சாண்டியை தமிழ் கட்சிகள் எதிர்க்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பொதுஜன முன்னணி அரசாங்கம் குறிப்பாக தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வினைக் கொண்டு வருவதுடன், ஒரு தாசாப்த காலத்துக்கு மேலாகத் தொடர்ந்து வந்துள்ள கொடிய அழிவு யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று பலர் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் அவ் நம்பிக்கையானது சுக்குநூறாகி விட்டதென்றே சொல்ல வேண்டும். பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்று கூறுவார்கள். பன்னெடுங்காலமாக சிக்கலாக்கப்பட்ட இத்தகையதொரு பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு ஆற்றல், நேர்மை, துணிச்சல், பற்றுறுதி ஆகிய குணாம்சங்கள் ஆட்சித் தலைவர்களிடம் இருக்க வேண்டும். தேர்தல் காலத்தில் எவ்வளவு தான் நல்ல நல்ல வாக்குறுதிகளை வழங்கிய போதும் பதவிக்கு வந்ததும் மேற்படி குணாம்சங்கள், நிலை பெறுவதற்குப் பதிலாக சந்தர்ப்பவாதத்துக்கும் பௌத்த பேரினவாதத்துக்கும் ஆட்சியாளர் ஆளாகுவது தான் இந்த நாட்டின் துரதிஷ்டவசமான வரலாறாகும்.

தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் என்றாலும் சரி, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் என்றாலும் சரி சந்திரிக்கா அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் வெள்ளிடை மலை. எனவேதான் "தேசபக்த சக்திகள்" சில, மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று குரல் கொடுத்து வருகின்றன.

தினேஸ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, அமைச்சர் சிறிமணி அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளும் பௌத்த மத பீடங்களைச் சேர்ந்தவர்களுமே இதனை முன்னெடுப்பதில் முன்னணியில் நிற்கின்றனர். அத்தோடு தொழில்சார் சங்கங்களுக்கான ஸ்தாபனமும் (OPA) இதனை ஆதரித்து வருகிறது. எனவே பெரும்பாலும் இனவாதம் அல்லது இனச்சாயல் கொண்ட சக்திகளே இதனை முன்னெடுக்கின்றன என்பது கண்கூடு. சிங்கள மக்கள் மத்தியில் தலைசிறந்த புத்திஜீவிகள், அறிஞர்கள், மிதவாதிகள் எனக் கருதப்பட்டு வந்தவர்கள், மற்றும் தொழிலரறிஞர்கள், முன்னாள் நீதியரசர்கள் போன்றோர் கூட இனவாதப் போக்கினைக் கடைப்பிடிக்கத் தலைப்பட்டுள்ளனர். இத்தகைய சக்திகள் இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வினை யாவது கொண்டு நடத்துவதற்குப் பெரும் முட்டுக்கட்டையாகவே விளங்கும். இத்கைய சக்திகள் அனைத்தினங்களினதும் ஏழை எளிய மக்களினர்க்கு எதிரான சக்திகள் என்பது அயராது அம்பலப் படுத்தப்பட வேண்டும். இது அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லிம் முற்போக்கு சக்திகளும் ஓரணியில் சேர்ந்து தலைமை தாங்கி நடத்த வேண்டிய பாரிய பணியாகும்.

தேசிய அரசாங்கம் அமைப்பதை இடதுசாரி கட்சிகள் ஏற்கனவே எதிர்த்து வருவது தெரிந்ததே. இந்த எதிர்ப்பானது விஸ்தரிக்கப்பட்டு வலுவூட்டப்பட வேண்டியதாகும். தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை தேசிய அரசாங்கம் என்ற பேச்சே ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் கொண்ட தேசிய அரசாங்க மொன்றினால் தமிழ் பேசும் மக்களை மேன்மேலும் அழித்தொழிக்க ஆவன செய்யப்படுமேயொழிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அறவே அக்கறையற்றுப் போய்விடும். இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே ஒழிய இனப்பிரச்சினையல்ல என்றுணர்த்த முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் பாணியிலான பல்லவிகள் வெளிவரத் துவங்கினாலும் யாரும் ஆச்சரிப்படுவதற்கில்லை.

குறிப்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தேசிய அரசாங்கம் அமைப்பது தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு உகந்ததாயிருக்கும் என்று கூறிவந்துள்ளமை தெரிந்ததே. இது ஒரு தவறான நிலைப்பாடென்பதை மீண்டும் கூறிவைக்க வேண்டியதில்லை.

இன்றைய தேவை ஒரு இடதுசாரி முன்னணியாகும் இத்தகையதொரு முன்னணியினை அமைப்பதற்கு தமிழ்க்கட்சிகள் அல்லும் பகலும் பாடுபட வேண்டும். முதலாளித்துவ கட்சிகளிடம் அல்லது மகா சங்கத்தினரிடம் பேச்சுவார்த்தைகள் நடத்துவதால் பலனேதும் ஏற்படும் என்பதற்கில்லை. அதே நேரத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் தமது சொந்தமான நிலைப்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் உள்ளே இருந்து தெரிவித்துக் கொண்டிருப்பதை விடுத்து வெளியேறி அவற்றுக்காக வீதியிலிறங்கிப் போராடும் காலம் நிச்சயமாக வந்து விட்டதென்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

தேசிய அரசாங்கமொன்று அமைப்பது அவசியம் என்று, சில வட்டாரங்கள் வலியுறுத்தி வருகின்றன. இது ஒரு பூச்சாண்டியென்பதை யாரும் மறந்து விடக்கூடாது. இடதுசாரிக் கட்சிகள் இந்த யோசனையை எதிர்க்கின்றன. இதனை தமிழ் கட்சிகளும் கண்டிப்பாக எதிர்ப்பது அவற்றின் கடமையாகும். மேற்கண்டவாறு நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தனது அபிப்பிராயத்தை தெரிவிக்குமாறு வினவிய போது எம்மிடம் கூறினார். ■

## தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மண்ணின் உரிமையை ஏற்காதவர்களால் இனப்பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது.

ஜேர்மனியில் தோழர் சரணபாலா



"17 ஆண்டுகள் துன்பப்பட்ட மக்கள் பொது ஜன முன்னணியை ஆட்சிபீடமேற்றியது தமது துன்பங்களுக்கு விடிவு தேடுவதற்காகும். இன்று மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இந்த அரசாங்கம் அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்ற முடியவில்லை. விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகின்றன. வாழ்க்கைச் சுமை தாங்க முடியவில்லை. வருகிறது, வருகிறது என்ற தொழிலாளர் சாசனத்தின் அறிகுறிகளுமில்லை. யுத்தத்தை தீவிரப்படுத்தியுள்ளனர். யாழ் வாழ் மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுத் தருவதாகக் கூறிய இடதுசாரித் தலைவர்கள் தடுமாறுகின்றனர். அரசாங்கம் நாளுக்கு நாள் அதல பாதாளத்தை நோக்கிச் செல்கின்றது".

இவ்வாறு ஜேர்மனியின் பெர்லின் நகரத்திலே நடந்த கூட்டமொன்றில் கலந்து கொண்ட நவசமசமாஜக் கட்சியின் அரசியல் சபை பிரமுகராகிய தோழர் பி.டி சரணபால உரையாற்றும் போது கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

இன்று இந்தக் கணத்தில் தமிழ் மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி நவசமசமாஜக் கட்சி மட்டுமே என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். யுத்தத்திற்கெதிராக குரல் எழுப்பியது நவசமசமாஜக் கட்சியே, வெண் தாமரை இயக்கத்திற்கெதிராக போராடியது நவசமசமாஜக் கட்சியே. ஊர்வலம் நடத்தியதும், சுலோக அட்டை தாங்கி ஆர்ப்பாட்ட குரலெலுப்பியதும் நவசமசமாஜக் கட்சியே. இப்பொழுது நாம் இந்த அரசாங்கத்திற்கு கூறுவதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அதுதான் இராணுவத்தை திரும்ப அழையுங்கள் என்பதாகும். தமிழ் அரசியல் கட்சிகள் இந்த ஆட்சியினர் மீது நம்பிக்கை கொண்டு அவர்களின் பின்னே செல்கின்றன. விடுதலைப் புலிகள் மூன்றாம் ஆளை இதில் தலையிட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். இன்று விடுதலைப் புலிகளுக்கு மிஞ்சியிருப்பது ஒன்று தான் தமிழ் மக்களின் உரிமைக்கு குரல் கொடுக்கும் நவசமசமாஜக் கட்சியுடனும் அது போன்ற அமைப்புகளுடனும் இணைந்து வெகுஜனப் போராட்டத்தை ஆரம்பிப்பதாகும். பொது மக்களின்

தொடர்ச்சி.......2ம் பக்கம்

## கொதித்தெழும் மலையக மக்களுக்கு அனைத்து சக்திகளும் ஆதரவு வழங்க வேண்டும்

பொது ஜன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு, மலையக மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். பாரம்பரிய மலையக தொழிற்சங்க தலைமைகளினதும், பழைய இடதுசாரிகளினதும், அக்கறையற்ற போக்கின் மீது, விரக்தியும், வெறுப்பும் கொண்ட இத் தொழிலாளர்கள், அரசுக்கெதிராக போராட்டத்தில் குதித்துள்ளனர்.

அரசின் வேகமான தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளால், மலையக மக்கள் முன்னெப் போதும் இல்லாத அளவு பாதிப்புக்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இத்தகைய தனியார் மயமாக்களின் அபாயத்தை மறைப்பதற்கு சந்தர்ப்பவாதமான முறையில், மலையக தொழிற் சங்க தலைவர்கள் செயற்பட்டு வந்தமை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

வாழ்க்கை சுமை அதிகரித்தமை, சம்பள உயர்வு இன்மை, வேலை நாட்கள் குறைப்பு மலையக இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப்படல், போன்ற பல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட இத்

தொடர்ச்சி....... 3 ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



## இடதுசாரிகள் ஒன்றுபட வேண்டும்

உலகத்தில் சோசலிசம் மலராவிட்டால் காட்டுமிராண்டித்தனம் தானம் மிஞ்சும் என்ற கருத்தினை மாக்ஸ் / ஏங்ஜெல்ஸ் ஆகியோர் வெறுமனே வறட்டுச் சித்தாந்தமாகக் கூறிவைக்கவில்லை. முன்னாள் சோவியற் ஒன்றியம் சரிந்ததுடன் சோசலிசமே பூமியிலிருந்து மறைந்து விட்டதென்று கூப்பாடு போடும் கூட்டம் இருக்கத்தான் செய்கின்றது. பல பாரம்பரிய இடதுசாரி அமைப்புகளே தடம்புரண்டு விட்டனவென்றால் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் சோசலிசம் பற்றி எள்ளி நகையாடுவது பற்றி ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால் உலக முதலாளித்துவம் தான் சென்றுள்ள நெருக்கடி நிலையிலிருந்து தன்னை மீட்பதற்காகவே பிரயத்தனம் செய்து வருகிறது. இதற்காகவே உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற நிறுவனங்கள் உழைத்து வருகின்றன. இதற்காகவே அண்மையில் உலக வர்த்தக நிறுவனம் நிறுவப்பட்டது. இவையெல்லாம் வறிய நாடுகளுக்கு மேலும், வறுமையையே வழங்கிக் கொண்டிருக்கும். செல்வந்த நாடுகளில் கூட ஏறத்தாழ 30% மேல் மட்ட குழாத்தினரைத் தவிர ஏனையோர் ஓரங்கட்டப்பட்டு வருவது கண்கூடு. ஆகவே உலகில் ஒட்டு மொத்தமாக அதிகப் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் வறுமை நிலவும் போது இன, மத ரீதியான விரசல்கள், கலவரங்கள் உள்நாட்டு யுத்தங்கள் பலத்த உயிர் உடமை அழிப்புகள் அதிகரித்த வண்ணமிருக்கும்.

உலக முதலாளித்துவம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உலகளாவிய கட்டமைப்புக்களையே ஏற்படுத்திக் கொண்டிருக்கையில் சோசலிச / இடதுசாரி சக்திகள் உலகளாவிய ரீதியில் தம்மைப் பலப்படுத்துவதை முன்னெப்போதுமில்லாதளவு அவசியமாகக் கொண்டு செயற்பட் வேண்டும். (இலங்கையைப் பொறுத்த வரையில் இடதுசாரிகள் ஒரு சுதந்திர இடதுசாரி முன்னணியை நோக்கி நகர வேண்டியது மேலும் காலம் தாழ்த்தப்படக் கூடிய காரியமல்ல. அன்று எதிரணியிருந்து பல சாதனைகளைப் புரிந்த இடதுசாரி இயக்கம் இன்று ஏன் கைகட்டி நிற்கவேண்டுமென்பதே பெரிய கேள்வியாகும். திறந்த பொருளாதாரத்தையும் அரச துறைகள் தனியார் மயமாக்கலையும் கொள்கையளவில் எதிர்க்கும் இவர்கள் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதற்கு எந்த வித நியாயமுமில்லை. நாடு இட்டுச் செல்லப்படும் மிக இக்கட்டான நிலைமைக்கும் தமிழ் பேசும் மக்கள் அழித்தொழிக்கப்படுவதற்கும் இடதுசாரிகள் இனிமேலும் துணைபோவது நிறுத்தப்பட வேண்டும். அவை சுய விமர்சனம் செய்து தாம் விட்ட தவறுகளை ஏற்றுக் கொண்டால் இடதுசாரி முன்னணியினை அமைக்கும் பணிமிக இலகுவானதாகும்.

இந்திய இடதுசாரிகள் கூட ஒற்றுமையின்றிச் செயற்பட்டுக் கொண்டிருப்பது துரதிருஷ்ட வசமானதாகும். உண்மையில் கண்டிக்கப்பட வேண்டியதாகும். குறிப்பாக, முழு இந்திய உபகண்டத்தினதும் தலைவிதியை நிர்ணயிப்பதில் இந்திய இயக்கம் வகிக்க வேண்டிய பாத்திரம் அதி முக்கியமானதாகும். இந்திய இடதுசாரிக் கட்சிகள் கூட்டணியொன்றினை அமைத்து ஆட்சியைக் கைப்பற்றும் கண்ணோட்டத்துடன் செயற்படுவது இன்று முன்னெப்போதுமில்லாதளவு சாதகமான நிலைமை உள்ளது. ஏனென்றால் ஆளும் காங்கிரஸ் கட்சியும் அடுத்த பெரிய கட்சியாகிய பாரதீய ஜனதா கட்சியும் ஹவாலா போன்ற பல இலஞ்ச ஊழல் சகதியில் சிக்குண்டுள்ளன. மறுபுறத்தில் ஜனதா தள்/தேசிய முன்னணி நிச்சயமற்றதொரு சக்தியாகும். எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் சாதகமான நிலையில் உள்ளன. அவை ஒன்று சேர்ந்து இத்தகைய நிலைமையை பயன்படுத்தும் தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முன் வருமாறு நாம் தோழமையுடன் வேண்டுகிறோம். இத்தகைய நடவடிக்கை தெற்காசிய பிராந்தியம் முழுவதற்குமே ஒரு உத்வேகத்தையளிக்கும். பாகிஸ்தானில் இடதுசாரி இயக்கம் பலவீனமாயிருப்பது தெரிந்ததே, பங்களாதேஷ் நிலைமையும் அதே தான், பங்களாதேஷ் மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கையில் இரண்டு பெண் முதலாளித்துவாதிகள் அப்பம் பங்கிட்ட குரங்கு போல் செயற்படுகின்றனர். நேபாளத்தில் இடதுசாரிகள் சற்று பலமாயிருப்பது உற்சாகமான காரியமாகும்.

எனவே தான் இலங்கையிலும் இடதுசாரிகள் சக்திகளை மீண்டும் ஒன்று திரட்டி கட்டியெழுப்புவதற்கு லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் விரைந்து முன்வர வேண்டும். நாட்டைக் காப்பாற்றுவதற்கு அதை விட வேறு வழியில்லை.

## முடிவில்லா சோகத்தில் வடபகுதி - அரச ஊழியர்கள்

வடபகுதியில் சூரிய கதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அரச ஊழியர்களின் நிலை மிகவும் அவலம் நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. குறிப்பாக கொழும்பு மாநகரத்திலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தற்காலிகமாக தங்கியிருக்கும் அரச ஊழியர்களின் நிலை அதைவிட மோசமானதாகவே உள்ளது. இவ் அரச ஊழியர்கள் கடந்த ஆறு மாதங்களாக வேதனமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் உள்ளனர். தமது நிலையைப் பற்றி வடக்கு கிழக்கு ஆளுநர் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தின் பல்வேறுபட்ட தலைவர்களுக்கு எத்தனையோ மனுக்களைச் செய்தும், எதுவித பலனும் இல்லாமல் மிகவும் விரக்தியுற்ற நிலையில் இவ் அரச ஊழியர்கள், காணப்படுகின்றனர்.

பல்வேறுபட்ட உதிரிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆர்வம் காட்டும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் ஏனோ தானோ என்று இருப்பது என்னவென்று புரியாது இருக்கின்றது. பாராளுமன்றத்தில் பதவி வகித்து வரும் அரசாங்க கட்சி இடது சாரிகளும் இவ்விடயத்தில் அக்கறை காட்டியதாக தெரியவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதாக கூறிக் கொண்டு, நீண்ட கருத்தரங்குகளையும், தொலைக் காட்சி சம்பாஷனைகளையும் நடத்தும் அரசாங்கம் இப்பிரச்சினை பற்றி எதுவும் தெரிந்து கொண்டதாக காட்டாமல் இருக்கின்றது.

இன்று தமிழ் மக்கள் இலங்கை என்ற தேசியத்தில் இருந்து விலகிக் கொண்டே செல்கின்றார்கள். இவர்களுடன் வடபகுதி அரச ஊழியர்களும் அரசின் நடவடிக்கைகளால் இணைவார்களாயின் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை. ■

## இலங்கை உலக கோப்பையை வென்றமைக்கு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால்

### இவ்வெற்றியை தமிழ் மக்களும் கொண்டாட முடியுமா?

கடந்த 17/3/96ல் லாகூரில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியில், இலங்கை, அவுஸ்திரேலியாவை தோற்கடித்ததன் மூலம் மிகப்பெரிய சாதனை ஒன்றை நிலை நிறுத்தியுள்ளது. கூட்டுப் பொறுப்பான நடவடிக்கையின் மூலம் இலங்கை அணிக்கு இவ்வெற்றி கிட்டியுள்ளது. ஏனைய சில விளையாட்டுகள் போல் தனிப்பட்ட ஒருவர் என்று இல்லாமல் ஒரு குழுவின் பொறுப்பான செயற்பாட்டில் கிரிக்கட் விளையாட்டு வெற்றி தங்கியுள்ளது. அந்த வரிசையில் ஒரு குழுவுக்கு கிடைத்த வெற்றியாக கருதி நாம் பாராட்டுகின்றோம்.

வெள்ளை மேலாதிக்கம் உள்ள அவுஸ்ரேலியா இக்கோப்பை தமக்கே கிடைக்கும் என்ற இறுமாப்பில், சில மேலாதிக்க கருத்துக்களை ஏற்கனவே தெரிவித்தது. குறிப்பாக இந்த சின்ன சிறிலங்காவினர் எப்படி இந்த கோப்பையை வெல்ல முடியும், என்ற சாரத்தில் சில போட்டி வீரர்கள் தெரிவித்த கருத்து இலங்கை பெரும்பான்மை மக்கள் மத்தியில் பெரும் சீற்றத்தை தூண்டி விட்டிருந்தது. இதன் விளைவாக தென்இலங்கையில் பெரும் "விடுதலைப்" போராக இப்போட்டி கருதப்பட்டது.

அரசியல் வாதிகள், முதலாழிகள், மதகுருமார்கள், சாதாரண மக்கள் என அனைவரும் திரண்டெழுந்து மேற்படி போட்டியில் இலங்கைக் குழு வெற்றிபெற வேண்டும் என உணர்ச்சிகரமாக செயற்பட்டனர். இலங்கை அணி போட்டியில் வெற்றியும் பெற்றுள்ளது. உண்மையில் தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரையில் இலங்கை பெற்றுள்ள வெற்றியை அவர்கள் இதயபூர்வமாக ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகமே? விளையாட்டுத் துறையில் தமிழ் மக்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். அதிலும், கிரிக்கட் விளையாட்டில் புறக்கணிப்பு உயர்ந்த அளவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்தியாவை எடுத்துக் கொண்டால் அந்த நாட்டில் ஒரு முஸ்லீம் வீரரே இந்திய அணிக்கு தலைமை தாங்குகின்றார். இன்றுள்ள சூழ்நிலையில் இலங்கையில் அப்படியான ஒன்றை கற்பனையே செய்ய முடியாது. இலங்கை குழுவில் தமிழரோ, அல்லது முஸ்லீமோ இடம் பெறவில்லை. அங்கனம் இடம் பெற வேண்டும் என்பதற்கான முயற்சிகள் ஏதும் எடுக்கப்பட்டதென்றால் அதுகூட நடை பெறவில்லை.

உண்மையில் இலங்கை அணியில் எல்லாச் சமூகத்தினர் இடம் பெறுவார்களாயின், இதைவிட பெரிய சாதனைகளை இலங்கை நிலைநிறுத்த முடியும். கொடிய இனவாதம் இலங்கை அரசியலில் இடம் பெறமுன்பு எத்தனையோ தமிழ், முஸ்லீம் விளையாட்டு வீரர்கள் உலக அளவு விளையாட்டு போட்டிகளில் இலங்கைக்கு புகழை ஈட்டிக் கொடுத்துள்ளனர் என்பதை நாம் மறுக்க முடியாது.

மேற்படி கிரிக்கட் போட்டி நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளையில் நேர்முக வர்ணனை யாவும் சிங்களத்திலேயே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தால், ஒலிபரப்பப்பட்டது. இது ஒன்றே போதாதா இலங்கையில் ஏனைய சமூகங்களுக்கு விளையாட்டுத் துறையில் உள்ள முக்கியத்துவம்.

ஒரு சில அவுஸ்திரேலிய கிரிக்கட் வீரர்கள் இலங்கையைப் பற்றி தெரிவித்து இருந்த கருத்து இலங்கை சிங்கள மக்களை இவ்வளவு தூரம் மிகப் பெரியதொரு முயற்சிக்கு அடித்தளமாகி விட்டது. அதாவது கிரிக்கட்ட என்னும் ஒரு விளையாட்டு சம்பந்தமான ஒரு விடயமே இதுவாகும். ஆனால் மறுபுறத்தில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவாதிகள் தெரிவிக்கும் இனவாத கருத்துக்கள தமிழ் மக்களை எவ்வளவு தூரம் வீறு கொள்ளச் செய்யும் என்பதை இனவாதிகள் உணர்வார்களா? இன்று தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசு கொடிய இராணுவ நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. லட்சக் கணக்கான மக்கள் அனாதைகள் போல் அகதிகளாக நடு ரோட்டில் விடப்பட்டுள்ளனர்.

ஒரு கிரிக்கட் வெற்றியினால் உணர்ச்சிவசப்பட்ட மக்களின் எழிற்சி கோலத்தை கட்டுப்படுத்த முடியாது திண்டாடியது இலங்கை அரசு. உண்மையாக தமது உரிமைக்காக எத்தனையோ லட்சக்கணக்கான மக்களின் உயிர்களை தியாகம் செய்து போராடிவரும் ஒரு இனத்தின் சுதந்திர எழிற்சியை, இலங்கை அரசால் கட்டுப்படுத்த முடியுமா? அதுவும் அமைச்சர் அனுருத்தரத்வத்தை கூறிய போன்று எதிர்வரும் ஏப்பிரல் மாதத்துக்கு முன்பாக!! ■

### தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய.....

...... 1ம் பக்க தொடர்ச்சி

பங்களிப்பு இல்லாப் போராட்டத்தில் பலன் கிடைக்காது என்பதை போராடுபவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மண்ணின் உரிமையை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களால் இப்பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வொன்றை அளிக்க முடியாது. விடுதலைப் புலிகளை அழித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமென்றால் அது வெறும் கனவாகவே முடியும். ஏனெனில் தீர்வு தேவை தமிழ் பேசும் மக்களுக்கே என்பதை மனதில் வைத்துக் கொள்வது நன்று.

இதய சுத்தியோடு தமிழ் பேசும் மக்களின் இதயங்களை வெற்றி கொள்வதன் மூலமே விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்த முடியும். யுத்தத்தை தீவிரமாக்கினால் நிச்சயம் தமிழ் மக்கள் தூர விலகிச் செல்வர். அதாவது பிரபாகரனிடம் நெருங்கிச் செல்வார்கள் இதை எவராலும் தடுக்க முடியாது.

தமிழ் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை இந்த அரசாங்கம் தள்ளிப் போடலாம். பாதிக்கப்படுவது தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல, நாடு முழுவதுமே குட்டிச் சுவராக்கி விடும் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தொடர்ந்து உரையாற்றிய தோழர் பி.டி. சரணபால, தீர்வுகாண்பதை அலட்சியப்படுத்தினால், நாம் ஒவ்வொருவரும் அதற்கான நட்ட ஈட்டை செலுத்த நேரிடும். நாங்கள் சின்னஞ் சிறிய கட்சிதான், ஆனால் எங்கள் நோக்கங்கள், இலட்சியங்கள் வலுவானதாகும் ஆகையினால் நவசமசமாஜக் கட்சியின் இன்றைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்குங்கள் என்று வேண்டிக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். ■

www.padippakam.com



# இத்தாலியின் முடிவிலாத அரசியல் நெருக்கடிகள்

இத்தாலியின் அரசியல் நெருக்கடிகளுக்கு உண்மையானதொரு அரசியல் தீர்வு இல்லாத நிலையே தென்படுகின்றது. எத்தகையதொரு தீர்வும் இல்லாத நிலையில், மூன்று வருட காலப்பகுதிக்குள் நான்காவது பொதுத் தேர்தலை இத்தாலிய மக்கள் சந்திக்கப் போகின்றார்கள். இவையே அந்த நாட்டின் உண்மையான நிலவரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

முதலாளித்துவத்தின் உயர் நிறுவனங்களை ஜனநாயகம், சட்டத்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை ஆகியன எல்லையற்ற முரண்பாடுகளுக்குள்ளாகி யுள்ளன. பாராளுமன்றத்தினதும், நிர்வாகத் துறையினதும் செயலிழந்த நிலையால் நீதித் துறையின் செல்வாக்கு உயர் நிலைக்கு சென்றுள்ளது. இதனால் அதிகாரத்தில் இருந்த முன்னைய அணியினர் பல பிரச்சினைகளை எதிர் நோக்கினர். ஆனால் இன்று நீதித்துறையும் முரண்பாடுகளுக்குள் சென்றுள்ளது.

இத்தகைய முரண்பாடுகளுக்கு எத்தகைய பரிகாரமும் காண முடியாத நிலை தோன்றியுள்ளது. கிறிஸ்த்தவ ஜனநாயகக் கட்சி அதிகாரத்திலிருந்து மறையும் போது வெறும் வெற்றிடமே தோன்றியுள்ளது. இக்கட்சி இத்தாலிய அரசியலில் கடந்த 40 வருடகாலமாக செல்வாக்கு செலுத்தி வந்துள்ளது. அத்துடன் சோசலிசக் கட்சியின் நேச அணியாகவும் இருந்து வந்துள்ளது.

இத்தாலியில் நடைமுறையில் இருந்த விகிதாசார தொகுதி முறை, சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இன்று இத்தாலிய மக்கள் தேர்தலில் "ஆம்" என வாக்களிப்பதன் மூலம் தேர்தலில் போட்டியிலிருக்கின்ற கூட்டு முன்னணியோ, கட்சிகளோ பதவிக்கு வரமுடிகின்றது. அதே போன்றே எதிர் கட்சியும் ஆகும். இந்த முறையை மேற்கு நாடுகளும் உதாரணமாக கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்புகின்றார்கள்.

1994ல் நடைபெற்ற தேர்தலில் வலது சாரிகள் அதிக ஸ்தானங்களில் வெற்றி பெற்றனர். ஆனால் செனற் சபையில் அவர்களினால் வெற்றி பெறமுடியவில்லை. ஒரு வருட காலப்பகுதிக்குள் வடபகுதி இடது அணி குழு, வலது சாரி அணியினரின் வாக்குகளைப் பிரித்து பெலுஸ் கோணி அரசை முறியடித்து ஒரு தற்காலிக வெற்றியை பெற்றனர். தேர்தல் நடந்த அடுத்த தினமே இடது சாரி அணிகளின் முக்கிய பிரிவுகளான ஜனநாயக இடது முன்னணியும், கம்யூனிஸ மீட்சிப் பிரிவு ஆகிய இரு அணிகளும் முக்கியமாக பிரச்சினைகளில் வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தனர். இதே வேளை வேறு ஒரு பிரிவும் அங்கு ஏற்பட்டது. இத்தாலிய மக்கள் ஆட்சியில் உள்ள புற்றிக்கலியோன் பிரிவினர் வலது சாரி அணியில் சேர பயன் கோ குழுவினர் போ இடது அணியினருடன் இணைந்தனர். தற்போது இத்தாலியில் நடைபெற்ற உள்நாட்டு பிரச்சனைகள் சம்பந்தமாக இத்தாலிய நாட்டின் தலைவர் 20 குழுக்களை சந்தித்து கலந்துரையாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றும் கூட நிலைமை மிகவும் மோசமானதொரு நிலையை அடைந்துள்ளது. அதேவேளை முன்னேற்றகரமான கருத்துக்களும் பல குழுக்களுக்கிடையே இருந்து தோன்றியுள்ளன. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொகுதி வாரி பிரதிநிதித்துவம், ஜனநாயக உத்தரவாதங்கள் என்பன இன்று மக்கள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் "மாற்றிச்" உடன்படிக்கைகளை மீள்பரிசீலனை செய்யப்படவும் உள்ளது.

### பெரும் பிரச்சினையாக உள்ள அரசியலமைப்பு சீர்திருத்தம்

அரசியலமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று புதிதாக அரசியல் யாப்பை வரைவதா அன்றேல் இருக்கும் அரசியல் யாப்புக்கு சீர்திருத்தங்கள் கொண்டு வருவதா?, இதேவேளை வலதுசாரி பிரிவினரும் தொகுதி வாரி பிரதிநிதித்துவத்துக்கு எதிராக செயற்படுகின்றனர்.

இன்று இத்தாலிய அரசியலை உற்று நோக்கும் போது உறுதியான அரசாங்கமா அல்லது அதிகார வர்க்க ஆட்சியா என்கின்ற இரண்டு விதமான போக்கு தென்படுகின்றது. இத்தாலிய வேலை வழங்குவோர் யாவரும் வலது சாரி பக்கம் தமது ஆதரவை வழங்கின்றனர்.

இத்தாலியில் உள்ள பெரிய அரசியல் அணிகள் யாவுமே பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. பெலுஸ்கோணி தனது அணியை பலப்படுத்த முடியாத நிலையிலேயே உள்ளார். இவ் அணி உண்மையில் தொகுதி ரீதியிலான பாராளுமன்ற அடிப்படையைக் கொண்ட அமைப்பாகும். இது இப்போது தனது முக்கிய பலத்தை இழந்து காணப்படுகின்றது. தற்போது இவ்வணி PDS எனப்படும். ஜனநாயக இடது முன்னணியுடன் அரசியல் சாசன சீர்திருத்தம் தொடர்பாக ஓர் இணக்கப் போக்கில் செயல்படுகின்றது. இவ் இரு அணிகளும் இணைந்து செயற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இத்தகைய இணைப்பால் பெலுஸ் கோணியில் அங்கம் வகிக்கும் சில வலது சாரிப் பிரிவுகள் வெளியேறப் போவதாக எச்சரித்துள்ளன.

இதே வேளை PRC எனப்படும் கம்யூனிச கட்சிப் பிரிவு எனப்படும் இடது அணி, முற்போக்கான இடதுசாரி அணியாக இத்தாலிய அரசியலில் காணப்படுகின்றது. இவ் அணி அரசினால் கொண்டு வரப்பட்ட ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்துள்ளது. அத்துடன் மாற்றிற் உடன்படிக்கை, பொஸ்னியாவுக்கு இத்தாலியத்து துருப்புக்கள் சென்றமை போற்றவற்றையும் வன்மையாக எதிர்த்துள்ளது.

இவ் அணி வலதுசாரி பிரிவினர் தேர்தலில் வெற்றி பெறுவதை எதிர்க்கிறது. அதேநேரம் அமையப்போகும் அரசுடன் ஒட்டி உறவாடுவதையும் இவ் அணி விரும்பாதிருக்கிறது.

இன்று உள்ள இத்தாலிய சூழ்நிலையை பார்க்கின்ற போது அங்கு உள்ள சமூக முரண்பாடுகள் உச்ச நிலையை அடைந்துள்ளது. இதனால் இங்கு சிறந்த ஓர் வெகுஜன முன்னணியை கட்டியெழுப்ப முடியும். அதேவேளை முரண்பாடுகளாலும், துரோகத் தனங்களாலும் விரக்தியுற்ற அனேக மக்கள் அரசியல் நடவடிக்கைகளை கைவிட்டும் உள்ளனர்.

இன்று உள்ள சூழ்நிலையில் இத்தாலியின் குழப்பமான அரசியல் நிலையில் பாதகத் தன்மையைக் கொண்ட அணியினர் மேலோங்குவதற்கும் வாய்ப்பு உள்ளது. அதே போன்று பாராளுமன்ற முறைகளை குறைத்து வலசாரி சர்வாதிகார போக்குள்ள அதிகார வர்க்க அணியும் அரசியல் களத்தில் உள்ளது.

எனவே இன்றுள்ள சூழ்நிலையில் இத்தாலியின் தொழிலாளர்களை அணி திரட்டி இடதுசாரி போராளிகளை கொண்ட பிரிவான இடதுசாரி அணி ஒன்று இத்தாலிய அரசியலில் இருக்க வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

■

# சூரிய கந்தையில் தோண்டல் ஆமர் வீதியில் என்ன?

முன்னைய யூ.என்.பி ஆட்சியாளர்களுக்கு, பெரும் அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்திய சம்பவம், எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலைகளாகும். இப் படுகொலைக்கு உள்ளான மாணவர்களை புதைத்த இடமான சூரிய கந்த பகுதியை அப்போது மேற்கு மாகாண முதலமைச்சராக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அம்பலத்துக்கு கொண்டு வந்ததன் மூலம் அரசியலில் மேலும் ஒரு வெற்றிகர அடித்தளத்தை பெற்றார்.

கடந்த யூ.என்.பி அரசினர் ஆட்சி காலத்தில், நடைபெற்ற ஆட் கடத்தல், படுகொலைகள் மற்றும் பொலிஸ், இராணுவ அத்துமீறல்கள் போன்றவற்றினாலேயே மக்கள் அவ் அரசின் மீது அதிகம் வெறுப்படைந்தனர். இவற்றை பெரியளவில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசாரப்படுத்தியே அம்மா பதவிக்கு வந்தார்.

ஆனால் இன்று நடப்பது என்ன? எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எதுவும் நடைபெறவில்லை. அத்துடன் எம்பிலிப்பிட்டிய மாணவர் விடயம் ஆறிய கஞ்சி பழம் கஞ்சி என்ற விடயமாகியுள்ளது.

மறுபுறத்தில் கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு சந்திரிகா அரசினால் படுமோசமான அடக்குமுறை நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. தமிழன் என்றால் கைது செய்யப்படும் நிலை தோன்றியுள்ளது. இப்போது படுகொலையும் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த 7.3.96ல் ஆமர் வீதியில் உள்ள வீடொன்றில் கைது செய்யப்பட்ட இரத்தினசபாபதி - மோகனதாஸ், கணபதிப்பிள்ளை, சதீஸ்குமார் ஆகிய இரண்டு தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது பெரும் மர்மமாகவே இருந்து வந்தது. தற்போதைய சட்ட ஏற்பாட்டின் படி கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை 24 நேரத்துள் அருகே இருக்கும் பொலிஸ் நிலையத்தில் கையளிக்க வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட நபர் எங்குள்ளார் என அவரின் குடும்பத்துக்கு அறிவிக்க வேண்டும்.

இவை யாவும் ஆமர் வீதி சம்பவத்தில் மீறப்பட்டு உள்ளன.

பல பொதுமக்களுக்கு மத்தியில் வெளிப்படையாக கைது செய்யப்பட்ட இந்த இரண்டு தமிழ் இளைஞர்களுக்கும் இந்த நிலை என்றால், இருட்டில் வேறு எத்தனை சம்பவங்கள் நடை பெறுகின்றனவோ! என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இந்த விடயத்தில் பொதுஜன முன்னணியுடன் இணக்கப் போக்கில் செயற்படும், சகல தமிழ் அமைப்புக்களும், வெளிப்படையாக தமது கண்டனத்தை தெரிவிக்க வேண்டும். இவ் விடயத்தை முளையிலே கிள்ளி எறியாவிட்டால் இவை போன்ற மேலும் பல சம்பவங்கள் இடம் பெற நாமே வழிகாட்டியாக வரலாற்றில் இடம் பெற்று விடுவோம்.

■

...... 1 ம் பக்கம் தொடர்ச்சி

## கொதித்தெழும் மலையக மக்களுக்கு ....

தொழிலாளர்கள் தலைமைகளை மீறிய நிலையில், போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இப் போராட்டத்தின் வேகத்தை குறைக்க முடியாத மலையக தொழிற் சங்க தலைமைகள், தாம் தமது கடப்பாடுகளை மறந்து விடவில்லையென்று காட்டுவதற்காக போராட்டங்களுக்கு தாம் தலைமை தாங்க தயாராக இருப்பதாக பறைசாற்றி வருகின்றன. இதற்காகவே முன்பு போராட்டங்களை ஒத்தி வைப்பதில் காலங் கடத்திய தலைவர்கள், இப்போது அடையாள வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர். அதைக் கூட அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் அல்ல எனக் கூறியுள்ளனர். அப்படியாயின் அரசின் தனியார் மயமாக்கலை இவர்கள் கொள்கை அளவில் ஆதரிக்கின்றார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். எனவே தனியார் கம்பனிகளின் கெடுபிடிகளுக்கு எதிராக மட்டும் போராடுவது என்று சொல்வது "எய்தவன் இருக்க அம்பை நோகும்" ஏமாற்று வித்தையாகும்.

எனவே தற்போது வீதியில் இறங்கி போராட்டத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும், மலையக தொழிலாளருக்கு, இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிலாளர் வாக்கமும், முற்போக்கு சக்திகளும், நிபந்தனை அற்ற ஆதரவு வழங்க வேண்டும் என அறைகூவல் விடுக்கின்றோம்.

■

படிப்பகம்

www.padippakam.com



# மாற்றீடான தொழில் நுட்பவியல்

பேராசிரியர் ஹெ. சிறியானந்தா
(பொறியியல் தொழில்நுட்ப பீடாதிபதி இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு)

- ★ தொழில் நுட்ப வளர்ச்சி தொழிலாளர்களிடம் இருந்து கூடிய வேலையை பெறுகின்றது.
- ★ தொழிலாளி வீட்டில் இருக்கும் வேளையில் கூட தொழில் செய்யவேண்டிய நிலை உண்டாக்கப் பட்டுள்ளது.
- ★ வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட தொழில் நுட்ப வளர்ச்சியின் தாக்கம் உள்ளது.
- ★ தொழில் நுட்ப வழர்ச்சிக்குரிய நுகர்ச்சி வழர்ச்சி பெறாவிட்டால் பாதிப்பு ஏற்படும்.
- ★ சுற்றாடலுக்கும் அருகி வரும் மூல வழத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளது.
- ★ சுற்றாடலுடனும், சமூகநல் வாழ்வுக்கும் ஏற்ற தொழில்நுட்ப முன்னேற்றம் இருக்க வேண்டும்.
- ★ ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்துக்கு சார்பாகவே தொழில்நுட்பவியல் வளர்க்கப்பட்டுள்ளது.
- ★ தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் இழப்பை அபிவிருத்தி குன்றிய நாடுகளின் தலையிலேயே முதலாளித்துவம் சுமத்தும்.
- ★ தொழில்நுட்பவியல் வழர்ச்சியில் முன்னணி வகித்த நிறுவனங்களான IBM, ATLT, DFC பல தொழில்களை இழந்தன.

விஞ்ஞானம் உதயமாகிய காலம் முதல், அதாவது கலிலியோ வாழ்ந்த காலம் முதல் அது ஒரு பக்கச் சார்பாகவே வளர்க்கப்பட்டதுடன், சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்துக்கு பயனளிக்கும் விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. விஞ்ஞானத்துக்கும், தொழில்நுட்பவியலுக்கும், காரணம் / பலாபலன் என்ற நோக்கிலான தொடர்பு இரு வழியானதாகும். இதில் விஞ்ஞானத்தை விட தொழில் நுட்பவியலே கூடுதலானளவு குற்றவாளியாகும் எனலாம்.

வழமையான தொழில்நுட்பிவியல் முன்னேறி வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தொழில்கள் அற்றுப் போகின்றன. எனவே புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கெதிராக பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் போராடியிருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் சில தொழில்கள் அற்றுப்போவது உண்மையானாலும் கூட வேறுசில புதிய தொழில்கள் (தொழில் திருப்தி மற்றும் சம்பளம் ஆகிய அம்சங்கள் ரீதியாக) உருவாகின்றன எனக் கூறப்படுகின்றது. உயர்தர தொழில் நுட்பத்துறையில், புதிய தொழில்கள் உண்டாக்கப்பட்டுள்ளன, என்பது ஒரு வகையில் உண்மையாகவும் உள்ளது. பல நூற்றாண்டுகள் ஊடாக வேலை வாரமும் படிப்படியாக குறைந்து வந்துள்ளது. பின்னோக்கிப் பார்க்கும் போது, இந்த நன்மையினால் ஏற்படும் சுமையானது, எதிர் காலத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் தலையிலேயே சுமத்தப்படப் போகின்றது.

எவ்வாறாயினும் மேற் கூறப்பட்ட நன்மை கூட இப்போது இல்லாது போய் உள்ளது. கடந்த காலங்களில் உயர்ந்த தொழில்நுட்ப முறை கடைப்பிடிக்கப்படுவதில் முன்னணி வகிக்கும், அதே கம்பனிகளாலேயே ஏராளமான தொழில்கள் இழக்கப்பட்டுள்ளன. உதாரணமாக IBM, ATLT, DFC ஆகிய கம்பனிகளை குறிப்பிடலாம். கம்பனிகள் பல இணைக்கப்படும் போதென்றாலும் சரி பெரிய கம்பனிகள் பிரிந்து போகும் போது என்றாலும் சரி தொழில்கள் இழக்கப்படுகின்றன. பிரதானமாக உயர்தர தொழில் நுட்பவியல் ஊடாக அதிகரித்து வரும் தொழில் உற்பத்தித் திறன் காரணமாகவே இந்த நிலைமை உருவாகியுள்ளது. இதனிடையில் புதிய தொழில் நுட்பமுறைகள் தொழிலதிபதிகள் தொழிலாளர்களிடமிருந்து கூடிய வேலையை உள்வாங்குவதற்கு வழிவகுத்துள்ளன. தொழிலாளர்கள் தமது வீடுகளில் தங்கியிருக்கும் போது அல்லது பிரயாணம் செய்யும் போது கூட வேலை செய்து கொண்டிருக்க இடமளிக்கப்பட்டுள்ளது!

அதிகரித்த தொழில் உற்பத்தி திறன் என்பது தொழிலாளரை மேலும் சுரண்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. தொழிலை இழக்கவே நேரிட்டு விடுமோ என்ற பயத்தினால் முன்னேற்ற நிலையிலுள்ள தொழிலாளர்கள் மேன்மேலும் கூடுதலான நேரம் வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் காரணமாக தொழிலாளர்கள் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நிலைமையும் உருவாக்கப்படுகிறது.

அபிவிருத்தி குன்றிய நாடுகளில் தொழில் நுட்ப மற்றும் முகாமைத்துவ முன்னேற்றங்கள் கூட தொழிலாளர்களை கூடுதலான சுரண்டலுக்கு ஆளாக்கவே பயன்படுத்தப்படுகிறது. வறிய மூன்றாவது உலக நாடுகளில் விவசாயத்துறையில் பெளதிக (Physical) மற்றும் பொருளாதார சக்தியின் உதவியுடன் விவசாயிகள் தமது விளைநிலங்களிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். உதாரணமாக தேயிலை / இறப்பர் தோட்டத் துறையில் உள்ளது போல, கூலியாட்கள் வேலை செய்வதற்கு கூட சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. மாறாக, அவர்களை குள்ளமான முறையில் ஒப்பந்தகார வெளியுற்பத்தியாளர் எனவகைப்படுத்தி (உதாரணமாக சீனிமற்றும் புகையிலைக்கான பெருந்தோட்டங்களைக் குறிப்பிடலாம்) தம்மைத்தாமே மாய்த்துக் கொள்ளும் பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மறுபக்கத்தில் கைத் தொழில் துறையில் கூட மிதமிஞ்சிய சுரண்டல் நடத்துவதற்கான புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக வைரக்கல் தொழிற் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள முகவர் (FRANCHISE) முறையைக் குறிப்பிடலாம்.

அதிகரித்துள்ள வேலையில்லாப் பிரச்சினை அபிவிருத்தி குன்றிய நாடுகளில் மட்டும் தான் காணப்படுகிறது என்பதற்கில்லை. (அபிவிருத்தியடைந்த) வடக்கு நாடுகளில் கூட, சமூக நலன்புரித் திட்டம் சரிந்துள்ள படியால் வறுமையும் பசிபட்டினியும், முன்னேறிய நாடுகளில் கூட சர்வசாதாரணமாகி வருகிறது. எனவே ஒரு ஸ்திரமற்ற நிலைமை இருப்பது தெளிவாகிறது ஏனெனில் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்கு ஏற்றவாறாக நுகர்ச்சிமுறையிலும் வளர்ச்சியில்லா விட்டால் அபிவிருத்தியானது தொடர்ந்து நிலைபெற முடியாது. உச்சக்கட்டமான வேலையில்லாப் பிரச்சினை மற்றும் நலன்புரி சேவைக் குறைப்பு காரணமாக நுகர்ச்சி மட்டம் அதிகரிக்க முடியாது. இதனிடையில் புதிய தொழில் நுட்பவியல் தேவைகளுக்கு அதிகளவு மூலதனம் தேவைப்படுவதால், இலாபங்களை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நலன்புரிச் சேவைகள் துண்டாடப்படுவது அவசியமெனப்படுகிறது!

இவையெல்லாவற்றையும் விட, சுற்றாடல் மற்றும் மூலவளங்கள் அருகி வருதலால் உண்டாகும் நெருக்கடி நிலைமை தற்போதைய நிலையினை பேணுவதற்கு அச்சுறுத்தலாகவுள்ளது. தொழில் திறனை அதிகரிக்கும் நோக்கில் மிக அதிகளவிலான முதலீட்டை ஈடுபடுத்தும் குறைந்தளவு உண்மையான உற்பத்தியைப் பெறுவதுமே இதற்கு காரணமாகும். எனவே ஒரு சிறு எண்ணிக்கையானவர்களே கோடீஸ்வரர்களாகிறார்கள். ஆகையால் அதிகப் பெரும்பான்மையான மக்கள் உற்பத்தி/நுகர்ச்சி வட்டத்துக்கு வெளியே தள்ளப்பட்டு "வெளியார்கள்" அல்லது "செல்லாக்காசுகள்" என்ற முத்திரைக்கு ஆளாக்கப்படுகின்றனர். வடக்குலக நாடுகளினதும் அதே போல் தெற்குலக நாடுகளினதும் உய்தலுக்காக வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் முற்றிலும் வேறுபட்டதான (புதிய) தொழில்நுட்பவியல் அவசியமாகிறது. இலாபமீட்டும் நோக்கத்தால் உந்தப்படாத, தகுந்த சமூக நிலைமையிலேயே அத்தகைய தொழில் நுட்பமுறை பரிணாமம் பெறும். மேற்குறிப்பிட்ட சுமை நீங்கும் போது மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான ஆட்களையும் சுற்றாடல் சிநேகமான தொழில் நுட்பமுறைகளையும் கட்டிவளர்ப்பதற்கு தற்போதைய விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தலாம்.

இந்த சுமையினை நீக்குவதற்குப் பாடுபடும் அதே நேரத்தில் அந்த நாளை எதிர்பார்த்து அத்தகைய தொழல் நுட்பமுறைகளை கட்டி வளர்ப்பதற்காக உழைப்பது எமது கடமையாகும். ■

## வெள்ளவத்தை கடற்கரை அகதிகள் வன்முறை மூலம் வெளியேற்றப்பட்டது
## தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையின் இன்னுமோர் அடையாளம்

1983 ம் ஆண்டு இனக் கலவரத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் இன்றும் புரையோடிய புண்ணாக இருந்தே வருகின்றது.

அண்மையில் வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் குடியிருந்த 30 குடும்பங்களைச் சேர்ந்த 133 பேர் நடுத்தெருவில் விடப்பட்டமையானது 1983ல் ஏற்படுத்தப்பட்ட அழிவு நடவடிக்கையின் தொடர்ச்சி என்றே கூற வேண்டும்.

18 மாதங்களுக்கு முன்னர் அகதி முகாமில் இருந்து வெளியேற்றப்பட்ட இம் மக்கள் இப்பகுதியில் தமக்கென சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

கொழும்பு மாநகர சபையின் அதிரடி நடவடிக்கையின் அநியாயத்தால் இம்மக்கள் நடுத்தெருவில் உள்ளனர். அது மட்டுமல்லாது இவர்களில் 26 பேர் பயங்கரவாதத்திற்கு துணைபோனவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். உண்மையில் கொழும்பு மாநகரம் பகுதியில் இந்த 30 குடும்பங்கள் அத்துமீறிய குடியிருப்புக்களை ஏற்படுத்தினார்கள் என்றால் அது தண்டனைக்குரிய குற்றமாகவே முடிவுசெய்ய வேண்டும். ஆனால் இன்று கொழும்பு மாநகரப் பகுதிக்குள் ஏராளமான அத்து மீறிய குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாதது பெரும் இன்சங்கார நடவடிக்கையால் தமது இல்லிடத்தை இழந்த இந்த மக்களை இங்கனம் மிலேச்சத்தனமாக இவர்களது குடியிருப்புக்களை அழித்து விரட்டியது மனிதாபிமான மற்ற செயலாகும்.

இன்று இலங்கையில் தமிழ்மக்களை அகதிகள் ஆக்குகின்ற நடவடிக்கைகளே மேலோங்கி நிற்கிறது. வடபகுதியில் 5 லட்சம் மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் பல் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர். அதே போன்று வெள்ளவத்தை கடற்கரை பகுதியிலும் தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் இந்த ஏழை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெறும் மேலோட்டமாக பார்க்க முடியாது. இதை தமிழ் மக்களுக்கு எதிராக கொழும்பு மாநகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் அழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே கருத வேண்டும்.

இத்தகைய அநியாய நடிவடிக்கைகளை நாம் பாராமுகமாக இருந்தால் எதிர்காலத்தில் இதைவிட படுபயங்கரமான நடவடிக்கைகளில் அரச நிர்வாகம் துணிந்து செயற்படும். ■

இச் செய்தித்தாள் கொழும்பு 2, கியு ரோட் 143/3ஆம் இலக்கத்தில் வதியும் திருநாவுக்கரசு என்பவரால், வெலோன் பெசேஸ் ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்